இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 30-04-2025

# ஆவேசமா? வேஷமா?

“காஷ்மீரில் நடைபெற்ற பயங்கரவாதச் செயலுக்குக் காரணமான தீவிரவாதிகளை வேட்டையாடுவோம். இந்தியாவின் பதிலடி என்பது கற்பனைக்கு எட்டாத அளவுக்கு இருக்கும்” என்று **‘ஆவேசம்’** காட்டி இருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. இது **உண்மையில் ஆவேசமல்ல, வேஷம் தான்** என்பது அவரது செயல் மூலம் தெரிகிறது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், பஹல்காம் மாவட்டம், பைசரன் பள்ளத்தாக்கில் பயங்கர தீவிரவாதிகள் கடந்த 22 ஆம் தேதி நடத்திய தாக்குதலில் 26 உயிர்கள் கொல்லப்பட்டன. இருபதுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தார்கள். இந்த இரக்கமற்ற கொடூரமான பயங்கரவாதச் செயல் கடும் கண்டனத்துக்கு உரியது. இதற்குக் காரணமான பயங்கரத் தீவிரவாதிகளைக் கைது செய்து தண்டிக்கும் கடமை ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு உள்ளது.

**இந்தக் கொடூர சம்பவம் நடக்கும் போது வெளிநாட்டில் இருந்தார் பிரதமர் மோடி. உடனடியாக நாடு திரும்பினார். ஆனால் சம்பவம் நடந்த பஹல்காம் மாவட்டம் செல்லவில்லை. காயமடைந்த மக்களை மருத்துவமனைக்குச் சென்று பார்க்கவில்லை. உயிரிழந்தோர் உடலுக்கு அஞ்சலி செலுத்தவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஒன்றிய அரசு நடத்தியது. அதிலும் கலந்து கொள்ளவில்லை. உடனடியாக நாடு திரும்பிய அவர், பீகாரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். பயங்கரவாதச் செயலைக் கண்டித்து பீகார் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசினார் பிரதமர். எனவேதான் அவரது பேச்சு ஆவேசமல்ல, வேஷம்தான் என்று சொல்ல வேண்டியதாக உள்ளது.**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதி காஷ்மீரில் சட்ட மன்றத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மோடி, “ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதம் இறுதி மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது” என்றார். **ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதம் இறுதிமூச்சை விடவில்லை. மக்கள்தான் இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.**

கிஷ்த்வார் என்ற தொகுதியில் பா.ஜ.க. சார்பில் ஷாகுன் பரிஹார் என்பவர் வேட்பாளராக அப்போது நிறுத்தப்பட்டு இருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு வன்முறையில் தனது தந்தை மற்றும் உறவினர்களை இழந்தவர் அவர். “கிஷ்த்வாரில் ஷாகுன் பரிஹாரை வேட்பாளராக நாங்கள் அறிவித்துள்ளோம். இது ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதத்தைத் துடைத்தெறியும் பா.ஜ.க.வின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. பயங்கரவாதத்தில் இருந்து ஜம்மு - காஷ்மீரை முழுமையாக விடுவித்து, அதை சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகவும், சர்வதேச திரைப்பட படப்பிடிப்புத் தளமாகவும் மாற்றுவதே எங்களின் நோக்கம்” என்றும் பேசினார் பிரதமர் மோடி. **இப்போது துப்பாக்கிப் பயங்கரம் வெடித்த இடம் சுற்றுலா தலம். கொல்லப்பட்டவர்கள் சுற்றுலா பயணிகள். அப்படியானால் ஜம்மு - காஷ்மீரை பயங்கரவாதத்தில் இருந்து விடுவித்துவிட்டோம் என்று மார்தட்டியது எப்படி உண்மையாகும்? அது வேஷம் அல்லவா?**

தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்த பாகிஸ்தான் மீது ஒன்றிய பா.ஜ.க. அரசு நடவடிக்கை எடுக்கிறது. இருநாடுகளுக்கும் இடையிலான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்துள்ளது. பாகிஸ்தானியர்களுக்கு விசா வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்களை உடனடியாக வெளியேற்றச் சொல்லி இருக்கிறது. அட்டாரி - வாகா எல்லை மூடப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள் ளது. பாகிஸ்தான் தூதர் அழைக்கப்பட்டு கண்டிக்கப்பட்டுள்ளார். இவை அனைத்தும் பயங்கரவாத சம்பவம் நடந்த பிறகு நடத்தப்பட்டவை. **ஆனால் ‘சவுகிதார்’ ஆட்சியில் இந்த சம்பவம் எப்படி நடந்தது?**

பா.ஜ.க. ஆட்சியில் இது முதல் சம்பவம் அல்ல. ‘கோழை இந்திய பிரதமராக இருப்பதால்தான் அண்டை நாடுகள் ஆட்டம் போடுகிறது’ என்று பிரதமராக மன்மோகன் சிங் இருந்த போது நரேந்திர மோடி சொன்னார். அவரது ஆட்சியில் என்ன நடந்தது?

* **2016 சனவரி 2 பதான்கோட் தாக்குதலில் 7 வீரர்கள் பலி.**
* **2016 பிப்ரவரி பொம்பொரியில் எட்டு ராணுவ வீரர்கள் பலி.**
* **2016 செப்டம்பரில் உரி தாக்குதலில் 19 படைவீரர்கள் பலி.**
* **2017 போபால் உஜ்ஜைனி தொடர் வண்டியில் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் எட்டுப் பேர் காயம்.**
* **2017 அமர்நாத் கோவில் தாக்குதலில் ஏழு பேர் பலி.**
* **2017 லெத்திபோரா கமாண்டோ பயிற்சி நிலைய தாக்குதலில் 5 பாதுகாப்பு வீரர்கள் பலி.**
* **2019 பிப்ரவரி 14 புல்வாமா தாக்குதலில் 40 படைவீரர்கள் பலி.**
* **2022 ஆகஸ்ட் 11 இரஜோரி ராணுவ முகாம் தாக்குதலில் 3 ராணுவ வீரர்கள் பலி.**
* **2024 மே 4 ஆம் தேதி ஜம்மு காஷ்மீர் பஞ்ச் பகுதியில் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் சண்டை ஏற்பட்டது.**
* **அதே ஆண்டு மே 19 ஷோபியான் பகுதியில் நடந்த தாக்குதலில் 2 பேர் பலி.**


இவை எல்லாம் நாளிதழ்களில் வந்த செய்திகள்தான். நாளேடுகளில் வராத செய்திகள் எவ்வளவோ?

2019 பிப்ரவரி 14 அன்று சி.ஆர்.பி.எஃப். படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 40 பேர் பலியான ‘புல்வாமா தாக்குதல்’ குறித்து, அப்போதைய ஜம்மு - காஷ்மீர் ஆளுநர் சத்ய பால் மாலிக் என்ன சொன்னார்? “ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியம்தான் இந்த தாக்குதலுக்குக் காரணம்” என்று சொன்னார்.

இப்போது பைசரன் பள்ளத்தாக்கில் ஒரு காவலர் இல்லை, ஒரு ராணுவ வீரர் இல்லை. இதுதான் காஷ்மீரத்துக்கு கொடுத்த பாதுகாப்பா?

**370 சிறப்புப் பிரிவை நீக்கினால் காஷ்மீர் அமைதியாகி விடும். காஷ்மீர் மாநிலத்தைப் பிரித்தால் அது அமைதியாகிவிடும். சட்டமன்றத் தேர்தல் நடத்தாவிட்டால் அமைதியாகி விடும். உள்ளூர் அரசியல் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்தால் அமைதியாகிவிடும் பூமராங் காட்டி வந்தார்களே தவிர, காஷ்மீரத்தை பாதுகாக்கவில்லை. அது அவர்களது நோக்கமாகவும் இல்லை. அதனால்தான் பிரதமர் பேச்சு வேஷமாகவே இருக்கிறது.**

••



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.4.2025) பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 135வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், வே.ராஜாராமன், மரு. இரா. வைத்திநாதன், ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க மே - 8 அன்று திருச்சி வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்க அலைகடலென திரண்டு வாரீர்!

## திருச்சி மாவட்டக் கழகத் தோழர்களுக்கு கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு வேண்டுகோள்!

*திருச்சி, ஏப். 30 -*

*திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 நாட்கள் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மே 8ஆம் தேதி திருச்சிக்கு வருகை தரும் முதலமைச்சர் அவர்களை கழகத் தோழர்கள், பொது மக்கள் அலைகடலென திரண்டு வந்து வரவேற்பு வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*முதலமைச்சர் அவர்கள் 08.05.2025 அன்று காலை 11 மணியளவில் விமானம் மூலம் திருச்சிராப்பள்ளிக்கு வருகைத் தர உள்ளார்கள். 8.5.2025 மற்றும் 9.5.2025 ஆகிய 2 நாட்கள் திருச்சி மாவட்டத்தில், பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.*

*கடந்த 4 ஆண்டுகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு சுமார் ரூ.2,500 கோடிக்கு மேலான வளர்ச்சி திட்டங்களை வழங்கியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் கடந்த 50 ஆண்டுகளில் திருச்சி மாவட்டத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு சாதனைகளை இந்த 4 ஆண்டுகளில் நிகழ்த்தியுள்ளார்கள்.*

*அனைவரும் ஆச்சரியப்படும் அளவிற்கு திருச்சி மாவட்டத்தில் பல்வேறு அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சாதனைகளை நிகழ்த்தியுள்ள திராவிட நாயகர் - முதலமைச்சர் அவர்களை கழகத் தோழர்கள், பொது மக்கள் திரளாக அணி திரண்டு வந்து வரவேற்பு வழங்கிட வேண்டுகிறேன்.*

*8.5.2025 அன்று காலை 11.30 மணியளவில் திருவெறும்பூர் அரசு மாதிரிப் பள்ளி வளாகத்தில் அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.*

*அதனைத் தொடர்ந்து அரசு விருந்தினர் மாளிகையில் அரசு அலுவலர்களுடன் ஆலோசணை நடத்த உள்ளார்கள்.*

*மாலை 5 மணியளவில் முதலமைச்சர் அவர்கள் அரசு விருந்தினர் மாளிகையிலிருந்து புறப்பட்டு தலைமை தபால் அலுவலகம், அரசு மருத்துவமனை, 4 ரோடு, தில்லை நகர் வழியாக கலைஞர் அறிவாலயம் சென்றடைவார்கள்.*

**கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல்!**

*கலைஞர் அறிவாலயத்தில், கழக நிர்வாகிகளுடன் கலந்துரையடல் மேற்கொள்வார். அதன் பின்னர், அரசு விருந்தினர் மாளிகை சென்றடைவார்கள்.*

*09.05.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் காலை 9 மணியளவில் அரசு விருந்தினர் மாளிகையிலிருந்து புறப்பட்டு மன்னார்புரம் 4 சாலை சந்திப்பு, கிராப்பட்டி, எடமலைப்பட்டி புதூர் வழியாக பஞ்சப்பூர் சென்றடைவார்கள்.*

**பஞ்சப்பூரில் பேருந்து முனையம் திறப்பு!**

*பஞ்சப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு அருகில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து ரூ.236 கோடி மதிப்பீட்டில் பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டுவார்கள்.*

*அதனைத் தொடர்ந்து, அதற்கு எதிர்ப்புறம் ரூ.129 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேறறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையத்தை திறந்து வைத்து, பேறறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைக்கிறார்கள்.*

*அதன் பின்னர், முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை அடைந்து அவ்வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைப்பார்கள். பின்னர், ரூ.408 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை திறந்து வைப்பார்கள். திறந்து வைத்த பின்னர், பேருந்து வளாகத்தை முழுவதுமாக சுற்றிப் பார்த்து, பொதுமக்களுக்கான வசதிகளைப் பார்வையிடுவார்கள்.*

*அதனைத் தொடர்ந்து, தளபதி அவர்கள் பேருந்து முனையத்தின் முதல் தளத்தில் நகரப் பேருந்துகளின் இயக்கத்தினை கொடியசைத்து தொடங்கி வைப்பார்கள்.*

*அடுத்ததாக, தளபதி அவர்கள் பேருந்து முனையத்திற்கு அருகில் நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்று சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பட்டாக்கள் வழங்கி, ரூ.463 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.277 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.830 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிப்பார்கள்.*

*அதன் பின்னர், அரசு விருந்தினர் மாளிகையை சென்றடைவார்கள்.*

*பின்னர், மாலை 5 மணியளவில் அரசு விருந்தினர் மாளிகையிலிருந்து புறப்பட்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்கள் MIET பொறியியல் கல்லூரியில் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பின்னர் இரவு விமானம் மூலம் சென்னை சென்றடைகிறார்கள்.*

*முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கழகத் தோழர்கள், பொது மக்கள் அலைகடலென திரண்டு வந்து தளபதி அவர்களுக்கு தங்களது ஆதரவையும், நன்றியையும் தெரிவித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு கழக முதன் மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

### குடும்பத்திற்காகக் கூட்டணி வைத்த பழனிசாமியின் அரசியல் வீழ்ச்சியின் ‘கவுண்ட் டவுன்’ தொடங்கிவிட்டது!

# மங்குனி மந்திரி சபை நடத்திய பழனிசாமி ஆட்சியில் அமைச்சரவை மாற்றமே நடக்கவில்லையா?

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, ஏப். 30 –

குடும்பத்திற்காகக் கூட்டணி வைத்த பழனிசாமியின் அரசியல் வீழ்ச்சியின் கவுண்ட் டவுன் தொடங்கி விட்டது என்றும் மங்குனி மந்திரி சபை நடத்திய பழனிசாமி ஆட்சியில் அமைச்சரவை மாற்றமே நடக்கவில்லையா? என்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

செந்தில் பாலாஜி, பொன்முடியின் பதவி விலகல் குறித்து கருத்து தெரிவித்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, “தி.மு.க. ஆட்சியின் பாதாள வீழ்ச்சி ஆரம்பித்து விட்டது. ஆட்சி மாற்றத்திற்கான விதைகள் துளிர்விடத் துவங்கி விட்டன” எனச் சொல்லியிருக்கிறார்.

**கட்சியை பா.ஜ.க.விடம் அடகு வைத்த பழனிசாமி!**

‘தேர்தலில் தோற்றால் கூட பரவாயில்லை. அடுத்த தேர்தலில் வெல்ல முடியும். ஆனால், கட்சி வீழ்ந்தால் தேர்தலில் வெற்றி சாத்தியமே இல்லை’ என்ற அடிப்படைக் கோட்பாடு எல்லாக் கட்சித் தலைவர்களிடம் உண்டு. 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கட்சி தோற்றாலும் பரவாயில்லை. தன் மீதும் தன் மகன் மீதும் சம்பந்தி மீதும் அமலாக்கத் துறை, வருமானவரித் துறை, சி.பி.ஐ. நடவடிக்கைகள் பாய்ந்துவிடக் கூடாது எனக் கட்சியை பா.ஜ.க.விடம் அடகு வைத்த கூட்டணிக்குச் சம்மதித்த பழனிசாமியின் அரசியல் பாதாள வீழ்ச்சியின் கவுண்ட் டவுன் தொடங்கிவிட்டது.

எடப்பாடி பழனிசாமி தலைமை ஏற்ற பிறகு எந்தத் தேர்தலிலாவது வெற்றி பெற்றிருக்கிறாரா? 2017 ஆர்.கே.நகர் இடைத் தேர்தல், 2019 நாடாளுமன்றத் தேர்தல், 2019ல் நடந்த 22 சட்டசபைத் தொகுதிகளின் இடைத் தேர்தல், 2019இல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2021 இல் நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2022இல் நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2023 ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல், 2024 நாடாளு மன்றத் தேர்தல், விளவங்கோடு இடைத் தேர்தல் எனத் தொடர்ந்து 10 தேர்தல்களில் தோற்ற கைராசிக்காரர்தான், ‘ஆட்சி மாற்றத்திற்கான விதைகள் துளிர் விடத் துவங்கி விட்டன’ என ஜோசியம் சொல்கிறார்!

**தோல்விப் புரட்சியாளர் பழனிசாமி!**

தொடர் தோல்விகளைச் சந்திப்பதில் புரட்சி செய்த, தோல்விப் புரட்சியாளர்தான் பழனிசாமி. 2025 ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலிலும் தோற்று, ‘11ஆவது தோல்வி பழனிசாமி’ என்ற அவப்பெயரைத் துடைக்கத் தேர்தலில் போட்டியிடாமல் கோழை போலக் களத்தைவிட்டே ஓடியவர்தான் பழனிசாமி.

தன் கைக்குக் கிடைத்த கட்சியைச் சீரழித்துச் சின்னாபின்னமாக்கி, தோல்வியில் சாதனை சரித்திரம் படைத்துவரும் ’தோல்வி’சாமி அ.தி.மு.க.வைப் பாதாள வீழ்ச்சிக்கு கொண்டு சென்று கொண்டிருக்கிறார்.



செந்தில் பாலாஜி, பொன்முடியின் பதவி விலகல் பற்றியெல்லாம் பேசப் பழனிசாமிக்கு அருகதையே இல்லை. தன்னுடைய ஆட்சியில் அமைச்சரவை மாற்றம் செய்யாமல் ஆட்சி செய்தாரா? தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மணிகண்டனின் பதவியை எதற்காகப் பறித்தீர்கள்? பொதுச் சொத்துக்குச் சேதம் ஏற்படுத்திய வழக்கில் தண்டனை பெற்றதற்காக பாலகிருஷ்ண ரெட்டி அமைச்சர் பதவியை இழக்கவில்லையா? இதையெல்லாம் பழனிசாமி மறந்துவிட்டாரா?

வளம் கொழிக்கும் அரசு கேபிள் டி.வி நிறுவனத்தைக் கைப்பற்றுவதிலும் தக்கவைப்பதிலும் நடந்த மோதலில், உடுமலை ராதாகிருஷ்ணுக்காக மணிகண்டனை அமைச்சர் பதவியிலிருந்து பழனிசாமி நீக்கினார்.

**நாற்காலிச் சண்டையை மறந்து விட்டாரா பழனிசாமி?**

திருப்பூரில் நடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில், முதல்வர் பழனிசாமிக்குப் பக்கத்தில் யார் அமர்வது? என்ற ‘நாற்காலிச் சண்டை’யில் ஒரு நாற்காலியை இருவரும் பிடித்துக் கொண்டு உடுமலை ராதாகிருஷ்ணனும் பொள்ளாச்சி ஜெயராமனும் சண்டை போட்டது தமிழ்நாடெங்கும் நாறியது. அந்த உடுமலை ராதாகிருஷ்ணனைத் தன் பக்கத்தில் அமர வைத்ததோடு அரசு கேபிள் டிவி தலைவர் பதவியையும் பழனிசாமி வழங்கினார்.

“தன்னுடைய துறையில் உடுமலை ராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்ட விஷயம்கூட எனக்குத் தெரிவிக்கப்படவில்லை” என மணிகண்டன் சொன்ன அன்றுதான், அவரின் அமைச்சர் பதவியைப் பறித்தார் பழனிசாமி. “மேடையில் நாற்காலிக்குச் சண்டைபோட்ட, கட்சியின் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்ட, உடுமலை ராதாகிருஷ்ணனுக்குக் கேபிள் டிவி சேர்மன் பதவி. அதை எதிர்த்து வெறும் கருத்து மட்டும் சொன்ன மணிகண்டனுக்குப் பதவிப் பறிப்பா?” என அ.தி.மு.க.வில் நடந்த குடுமிப்பிடிச் சண்டையை எல்லாம் வசதியாக மறந்துவிட்டீர்களா பழனிசாமி.

தெர்மாகோல் தொடங்கி சோப்பு நுரை வரை எடப்பாடி பழனிசாமி அமைச்சரவையில் உள்ள மந்திரிகள் உதிர்த்த உளறல் முத்துக்களை எல்லாம் தொகுத்தால், அது ஒரு வரலாற்று ஆவணம்; முதல்வர் முன்பே மேடையில் அடித்துக்கொண்ட காட்சிகள் எல்லாம் காவியம். இப்படி மங்குனி மந்திரிசபையை நடத்திவிட்டு, தார்மீகப் பொறுப்புடன் நடக்கும் தி.மு.க. அமைச்சரவையை விமர்சிக்க வெட்கமில்லையா?

**18 அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம்!**

“பழனிசாமி ஆட்சி ஊழல் நிறைந்தது” என்று சொல்லிப் போராட்டத்துக்குத் தேதி குறித்த... 11 எம்.எல்.ஏக்களை வைத்து இரட்டை இலையை முடக்கிய பன்னீர்செல்வத்துக்கு, துணை முதல்வர் அளித்த பழனிசாமி எல்லாம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அமைச்சரவையைப் பற்றிப் பேச அருகதை இல்லாதவர்.

எம்.ஜி.ஆரோ, ஜெயலலிதாவோ, கட்சிக்காரர் தவறு செய்தால் அவரின் கட்சிப் பதவியை, அமைச்சர் பதவியைப் பறிப்பார்கள்; இல்லை கட்சியை விட்டே நீக்குவார்கள். ஆனால் எம்.எல்.ஏ. பதவியைப் பறித்ததில்லை. அந்த மாபாதகத்தைச் செய்தவர் பழனிசாமி. தன் ஆட்சியைக் காப்பாற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் 18 பேரைத் தகுதிநீக்கம் செய்தார். அந்தப் பழனிசாமி தி.மு.க அமைச்சரவையைப் பற்றிப் பேசாமல் இருப்பது தான் அவருக்கு நல்லது!

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.